எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்

உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றும்

கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்

கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்

நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்

நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்

குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்

குறிக்கொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்!

கனவு 7 கற்பனை 10] திருச்சி 15—10—64 [25 காசுகள்

திருச்சிராப்பள்ளியில்

தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு

1—11—64ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை

திருச்சிராப்பள்ளித் தேவர் மன்றத்தில் நடைபெறுகிறது.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத் துணைத்தலைவர்

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்

மாநாட்டுக்குத் தலைமை தாங்குகின்றார்.

செஞ்சொற் கொண்டல்

திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள்

மாநாட்டைத் துவக்கி வைக்கின்றார்.

மாநாட்டுத் தீர்மானங்கள்

வளரும் தமிழுக்கு ஆக்கம் தருவதாகும்

பிற்பகல்

"நான் ஏன் பிறந்தேன்" என்ற தலைப்பில் ஒன்பது கவிஞர்கள்

"மனிதன் வாழ்வுக்கு வழிகாட்டவே"

என்பதுபற்றிச் சுவைபட கவியிசைத்து அரங்கேற்றுவார்கள்.

"இலக்கியப் படைப்புக்கு ஆதாரமாக அமைவது அறிவா? உணர்ச்சியா?" என்ற தலைப்பில் சொல்லேர் உழவர்கள், சுவைபடச் சொல்லரங்கில் வாதிட்டு, வழக்குரைத்து சொற்சிலம்பமாடுவர்.

சிந்தனைக்கு விருந்து சிறப்புச் சொற்பொழிவுகள். அனைவரும் வருகைதர வேண்டுகிறோம்.

வரவேற்புக் கமிட்டியார்.

எண்ண அலைகள் :

ஓ, காலதேவா!

—[வல்லிக்கண்ணன்[—

★

காலதேவனுக்கு வணக்கம்—

காலத்தை ஒரு தெய்வமாக்கி, அவனைக் கிழடுதட்டிப் போனவனுக உருவகப்படுத்தி, போற்றுவதும், குறைகூறுவதும் மனிதமனம் தனது உணர்ச்சித் தினவைத் தீர்த்துக் கொள்ளக் கையாள்கிற ஒருவகைச் சொறிதலே தவிர வேறு அல்ல.

சொறிதலிலும் ஒரு சுகம் உண்டு.

சொல்லப் போனுல், சில சமயம் சொறிதலில் தான் அதிகமான சுகம் கிட்டும். ரசஞானிகளின் அனுபவச் சுவை இது.

காலக்கிழவனுக்கு வணக்கம்—

காலம் மாபெரும் வங்கிழடு. அதுவே யுத்திளமைப் புதுப் பிறவியாகவும் விளங்குகிறது.

மனிதர்களுக்கு — எல்லா ஜீவராசிகளுக்கும் — மூப்பு உண்டு. முடிவும் உண்டு.

பிறப்பு என ஒன்று உடைய அனைத்துக்கும் அழிவு உண்டு தானே ?

காலம் அழிவற்றது. ஏனெனில் அது முதலும் அற்றது. ஆதியும் அந்தமும் அற்ற காலம் உயிருமற்றது; உணர்வுமற்றது. அதனல் தான் அதில் சிக்கிய மனிதப்பிராணிகள் உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டு நாடகமாடுகிருர்கள்.

அப்படியானுல்,

காலத்தை நாடக அரங்கம் என்பதா? நாடகங்களை இயக்கும் சூத்திரதாரி என்பதா ?

காலம் ஒரு களம். அங்கு ஜீவராசிகளின் உணர்ச்சி நாடகங்கள் மட்டுமல்லாமல், ஆசைப் போராட்டங்களும், செயலூக்கங்களும், ஏமாற்றங்களும் சோதனைகளும்,வெற்றிகளும் தோல்விகளும் நடந்துகொண்டே இருக்கின்றன.

காலத்தை ஒரு சக்தியாகக் கொள்ளாமல் தவிர்க்க முடியாது. அது உயிர்ப் பிராணிகளைக் கொண்டு சோதனை செய்து மகிழ்கிறது என்று கொள்ளலாம்...

மகிழ்கிறதாவது ? .... அதற்கு உணர்ச்சி ஏது ?

உயிரும் உணர்வுகளும் உடைய பிராணிகள் காலத்தின் குருட்டுத்தனமான சோதனைகளில் சிக்கி அல்லாடுகின்றன.

உயிரும் உணர்வும் மட்டுமின்றி, அறிவும் மனமும்—சிந்திக்கும் ஆற்றலும், குழம்பியும் குழப்பியும் அவதிப்படுகிற பண்பும் — பெற்று விட்டதனாலே, மனிதன் காலத்தின் சோதனைகளால் மிகுதியும் பாதிக்கப்படுகிருன். புழுங்கிக் குமையவும் நேரிடுகிறது.

காலம் குருட்டுத்தனமான, உணர்வற்ற சக்தியாக இருப்பதனுலே தான் மனிதர்களின் உணர்வுகளையும் மனத் துடிப்புகளையும் அறிவுக் கிளர்ச்சிகளையும் மதிக்காமல், தனது போக்கிலே அவர்களை ஆட்டிப் படைக்கிறது.

ஆனுல், இதில் ஒரு விசேஷம்—

தங்கள் இஷ்டம் போல் செயல் புரிந்து வாழ்வதாக மனிதர்கள் நம்புகிருர்கள்.

பிறப்பு என்ற வாயிலின் வழியாக வந்து, காலம் எனும் எல்லைக்குள் கிடந்து திண்டாடி, மரணம் என்கிற இன்னெரு வாசலின் வழியாக விடுதலை பெறவேண்டிய விதியைப் பெற்றுவிட்ட உயிர்ப்பிராணிகள், அந்த வாழ்க்கை (கால) எல்லைக்குள் ஆடித் தீர்க்கிற உணர்ச்சிக் கூத்துகளுக்கு எவ்விதமான கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை.

ஆகவே, காலம் ஒரு பொறி என்றும் கொள்ளலாம்.

அதன் உயர - நீள - ஆழ - அகலப் பரப்புகள் மனிதருக்கு மனிதர் மாறுபட்டுக் காணப்படுகிறது. அவரவர் காலம் தான் அவரவருக்கு உண்மையானது. எனவே, தனது வாழ்க்கையே (காலமே) முக்கியமானது, உயர்ந்தது என்று அப்பாவி மனிதர்கள் நம்புகிருர்கள்.

அவரவர் காலம் தான் உணர்வு பூர்வமாக — பிரத்யட்சப் பிரமாணமாக — அவர் அவருக்கு உண்மையானது என்ற போதிலும், தங்களுக்கு முந்தியும் காலம் உண்டு, பிந்தியும் காலம் உண்டு எனும் உண்மை மனிதர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருக்கிறது. அவர்களுடைய சொல், செயல், சிந்தனை எல்லாவற்றையும் பாதித்துக் கொண்டும் இருக்கிறது.

தனக்கு முன்னரும் காலம் எனும் சக்தி நெடிது நீண்டு கிடந்து மனித இனத்தையும் உலகத்தையும் பாதித்து வந்திருக்கிறது என்பதைத் தன்னை விட மூத்தவர்கள், முந்தைய தலைமுறைகள், அவர்தம் செயல்கள், அதிக வியாபகம் உடைய வரலாறுகள் முதலியவற்ருல் புரிந்து கொள்கிருர்கள்- பல தலைமுறை - தலைமுறை - தலைமுறைகளுக்குப் பிறகும் தாங்கள் இருப்பது போல், தங்களுக்குப் பிறகும் எத்தனை எத்தனையோ தலைமுறைகள் தோன்றிக் கொண்டிருக்கும் என்ற உணர்வு எவரையும் விட்டு அகலுவதில்லை.

அதனுல், மனிதன் மூன்று காலத்திலும் வாழ்கிருன் என்று சொல்லலாம். இறந்தகால நினைவும், நிகழ்கால அனுபவமும், வருங்காலக் கனவும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது.

பயனுள்ள உழைப்பு உழைத்தாலும், பயனில்லாத வீண் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும், வம்பளந்து வாய் பார்த்துச் சிரித்துப் பொழுது போக்கினுலும், தனியாக உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தாலும், அல்லது உம்மென்று அமர்ந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தாலும், தெருச் சுற்றினுலும், அல்லது ஒரே இடத்தில் உட்கார்ந்து பராக்குப் பார்த்திருந்தாலும் — ஓடுகிற காலம் ஓடிக் கொண்டே தான் இருக்கிறது.

எவ்வளவோ காரியங்கள் நடந்து கொண்டும் தான் இருக்கின்றன.

'நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பர். அதே போல், எனினும் நிச்சயமாக நிகழ் காலத்திலேயே எல்லோரும் உணரக் கூடிய உண்மை —

நாம் ஒன்று திட்டமிட, காலம் அதைக் குட்டிச்சுவராக அடித்து விடும்.

ஆசையோடு திட்டங்கள் தீட்டுகிருன் மனிதன். வளமான வருங் காலத்தைக் கருத்தில்கொண்டு செயல்

8ஆம் பக்கம் பார்க்க

எழுத்தாளன்

கனவு 7] குரோதி, ஐப்பசி (15-10-64) [கற்பனை 10

திருச்சி மாநாடு

வருகிற நவம்பர் மாதம் முதல் தேதியன்று திருச்சிராப்பள்ளியில் தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு நடைபெற இருக்கிறது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும் திரு. ஈ. வி. கே. சம்பத் மாநாட்டைத் தொடங்கி வைக்கவும் இசைந்திருக்கிறார்கள்.

மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக திரு எல். சி. ரிச்சர்ட் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். சிந்தனையைத் தூண்டும் சிறப்புச் சொற்பொழிவுகளும், சொல்லரங்கம் கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளும், வழக்கம் போல் நடைபெற இருக்கிறது.

ஆசிய ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு, இந்திய எழுத்தாளர்களின் தலைவராக இறுதிவரை விளங்கிவந்தார். அன்னாரது திருவுருவை முகப்பாகக் கொண்ட எழுத்தாளன் சிறப்பு மலர் மாநாட்டில் வெளியிடப்பட இருக்கிறது. எழுத்தாளன் சிறப்பு மலர் பற்றி நாம் அதிகமாக சொல்லவேண்டுவதில்லை. தமிழ் ரசிகர்களும், வாசகர்களும் திருப்தி அடைந்ததாக தெரிவித்த பாராட்டுதல்கள் சென்ற எட்டு வருடங்களில் எத்தனை எத்தனையோ உண்டு.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பல்வேறு பிரிவுகளை உட்கொண்ட பகுதிகளின் அறிமுகமாக மலர் விளங்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியின் சிகரத்தை எட்டிவிட்டோம் என்று சொல்லமுடியாவிட்டாலும், தமிழ் இலக்கிய வளர்ச்சியில், உணர்ச்சி பூர்வமாக சிந்தித்து உள்ளத் துடிப்பை சித்தரிக்க முயன்றிருக்கிறோம் என்ற அளவுக்கு மலரில் காணப்படும் கதை, கட்டுரை, கவிதை நாடகம், குழந்தைப்பகுதி முதலியன விளங்கும்.

தமிழ் மொழியை மற்ற மொழி பிராந்தியங்களில் உள்ளவர்கள் விரும்பிப் படிப்பதற்கு நாம் இதுவரை என்ன செய்திருக்கிறோம். இனிமேலாவது ஏதாவது செய்யமுடியுமா? செய்யும் மனப்பாங்காவது நமக்கு உண்டா என்பது போன்ற சிந்தனைகளை செய்வது பலன் உள்ள பணியாக இருக்கும் என்று மாநாடு கருதும்.

அரசியலார் ஒத்துழைப்புடன் செய்வது, தனிப்பட்ட சங்கங்களின் கூட்டுறவில் இதனைச் செய்வது பலன் தருமா என்பது போன்ற பல பிரச்சனைகளை மாநாடு சிந்திக்க இருக்கிறது. ஹிந்திப் பிரச்சாரசபை தென்னகத்தில் இருப்பது போல தமிழ்ப் பிரச்சாரக் கழகம் ஒன்று அமைத்து தமிழ் மொழியைப் பரப்புவதற்கு தமிழ் பெரு மக்களின் ஒருமுகமான கூட்டுறவை உருவகப்படுத்துமாறு தமிழ் அறிஞர்களை இம்மாநாடு வேண்டவும் முடிவு செய்திருக்கிறது.

எழுத்துப் பாணியில் சலியாத ஊக்கமும், தளராத நம்பிக்கையும் உள்ள சிந்தனையாளர்களை ஒன்றுகூட்டி ஆக்க பூர்வமாக, புதிய உற்சாகத்துடன் காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் இலக்கியப் படைப்புகளுக்கு தூண்டுதல் செய்வது எழுத்தாளர் மாநாட்டின் சிறப்பாகும். தமது நெடிய பரம்பரையை நினைவுகூர்ந்து எழுதுமாறு நினைவுபடுத்துவது மாநாட்டின் பணிகளில் ஒன்றாகும். திருச்சியில் நடைபெறும் எழுத்தாளர் மாநாடு லட்சிய நோக்கோடு எப்பொழுதும் தனது காம்பீர்யத்தை நிலைநாட்டி, பொதுமக்களின் அன்பாலும், ஆதரவாலும் பீடுநடைபோட்டு சிறப்பாக புகழும் விளங்குகிறது. இந்த வருட மாநாடும் புதிய சிறப்பைச் சேர்ப்பதாக அமையும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எழுத்தாளர்கள், ரசிகர்கள், ஒன்றுகூடும் சங்கமம் எழுத்தாளர் மாநாட்டு வைபவம். மனித வாழ்க்கையில் எத்தனைபோ நலன்கள் இருந்தும், மனிதன் மனிதனாக வாழாமல், நிலைகுலைந்து நிற்பதையும், மனிதன், கேவலம் என்று கருதும் மற்ற உயிர்வகைகள் மனிதனைவிட உயர்ந்த நெறி நின்று வாழ்வதையும், எழுத்தாளன் எண்ணிப்பார்க்கிறான். அறிவில் தெளிந்த மனிதனை விட அறிவில்லாதது என்று சொல்லப்படும் உயர்வகைகளின் மேன்மையான குணநலத்தைக்கண்டு தெளிகிறான். கவிஞனாக மாறி தன் கவிதைமூலம் தெள்ளத் தெளிந்த தீஞ்சுவைப் பாட்டிசைத்து நான் ஏன் பிறந்தேன் என்று கவிதை பாடுகிறான். இத்தகைய சிறப்பு மிக்க கவியரங்கம் ஒன்று மாநாட்டில் நடைபெற இருக்கிறது.

இலக்கியப் படைப்புக்கு அறிவும் உணர்ச்சியும் தேவையான அம்சங்கள். அறிவுமட்டும் போதும் என்று வாதிடுவோர் நம்மில் இல்லாமல் இல்லை. அறிவு இல்லாவிட்டால்கூட உணர்ச்சியிருந்தால் போதும் என்று எதிர் வழக்காடுவோரும் இருக்கிறார்கள். சுவை பொருந்திய இந்த வாதத்தை மாநாட்டின் சொல்லரங்கில் வாதிடப் போகிறார்கள். கேட்டு மகிழ, தன்னையறியாமல் சிரித்து மகிழ, கொடுத்துவைத்திருக்க வேண்டும் வாதத்திற்காக வாதமிட்டு முடிவில் முடிவுக்கு வரும் திருச்சி மாநாட்டு சொல்லரங்கம் எழுத்தாளரின் இதயப்பாங்கை உள்ளும்புறமும் காட்டுவதாக அமையும்.

உணவு நெருக்கடியும் மற்றெல்லா நெருக்கடிகளும் சேர்ந்திருந்தாலும் வழக்கமாக நடைபெறும் மாநாட்டை ஒத்திவைக்க இயலாத நிலையில் மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். எழுத்தாள அன்பர்கள் வழக்கம்போல வந்து கலந்துகொள்ள இந்த சமயம் முடியாவிட்டாலும், ஆக்க பூர்வமான தமது ஆலோசனைகளை வரவேற்புக் கமிட்டி, தமிழ் எழுத்தாளர் சங்கம், திருச்சி 2. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"மாயமும் உபாயமும்"

(கே. ஆர். பசுபதி)

★

சாக்ரடீசின் மாணவன் பிளேட்டோ; ளேட்டோவின் மாணவன் அரிஸ் ாட்டில்.

இந்த மும்மூர்த்திகள் கிரேக்க நாட்டு த்துவ ஞானத்தின் மூலவர்கள் என்று சால்லலாம்.

இவர்கள் பகுத்தறிவு வாதிகள்; ஆராய்ச்சியாளர்கள்; சிந்தனையாளர் ள்; விஞ்ஞானிகள்.

இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டு ளுக்கு முன்பு அற்புதமான கருத்துக் ளை தந்த நல்ல நாடு கிரேக்கம்.

கிரேக்கமும், நமது தாயகமும் மிக மிக நெருங்கிய தொடர்புடையது என் பதை நமது இலக்கியங்கள் இயம்பு கின்றன.

வாணிகத்துறையிலும், கலைத்துறை யிலும், ஞான, இலக்கியத் துறையிலும் நாம் கைகோர்த்து உலாவியவர்கள்.

எந்த ஒரு பொருளையும், அதன் உண்மையையும் கண்டறிய ஒரு அணு கும் முறை இருக்க வேண்டும்.

ஒரு பொருளின் தன்மையை, அதன் உள்ளிருக்கும் வளரும், சாகும் சக்தி களை, உள்ளபடி கண்டறியும் தன்மை யையே விஞ்ஞான பூர்வமான கண் ணோட்டம் என்று இங்கே குறிப்பிடு வது நல்லது.

உண்மையை கண்டறியும் முறை யை அரிஸ்டாடில் நான்கு பிரிவில் திருத்திக்கொண்டான்.

அவன் கூறுகிறான் :

1) வாழ்க்கையில் உள்ள பொருட் களைப்பற்றியோ, உயிர் ராசிகளைப் பற் றியோ சரியாகப் புரிந்துகொள்ள விரும் பினால் அதனுள் எப்படிப்பட்ட ரசாய னப் பொருட்கள், பௌதிகப் பொருட் கள் அடங்கிக் கிடக்கின்றன என்று காண வேண்டும்.

2) அவை உள்ளும், புறமும் எவ் வாறெல்லாம் அமைந்துள்ளன என்று காண வேண்டும்.

3) அவ்வாறான உடலமைப்பு, வடி வம், அவை எவ்வாறு பெற்றதென்று காண வேண்டும்.

4) அவைகளின் இயக்க விளைவு களென்ன. விளைவு தரும் மாறுதல் களென்ன என்பதைக் காண வேண் டும்.

இவ்வாறு கிடைக்கும் முடிவை பல ஆதாரங்களினாலும் உரைத்துக்கண்டு, எல்லாவற்றிலும் சரியென்று ருசுப்பிக் கப்பட வேண்டும். இது அரிஸ்டாட் டிலின் முறை. இதுவே சித்தாந்தம்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு வடி வம் உண்டு என்று எடுத்துக் கூறிய அரிஸ்டாடிலுக்கு எதிர்ப்பு கிளம்பியது. எதிர்ப்பாளர் "வடிவம் என்றால் என்ன?" என்ற வினாவை எழுப்பினர்.

"மரம் என்றால் என்ன ?" என்று அவர் எதிர்ப்பாளரைக் கேட்கிறார்.

மரம் என்றால் நின்ற இடத்திலேயே நிற்பது, நகர்ந்து செல்ல முடியாதது, வானுற வளரும், இலைகளை கொட்டும், மலரும், காயும், கனியும் தரும் என்று கூறிவிடுகிறோம்.

படர்ந்து செல்வது, மெல்லியது, கொழு கொம்பை நாடிச் சுற்றுவது என்றவுடன் கொடிஎன்று சொல்கி றோம்,

கருப்பாக இருக்கும், ஒற்றைக் கண் ணிருக்கும், "காகா" என்று கத்தும், பறக்கும் என்றவுடன் காகம் என்று கூறிவிட முடியும்.

நீளமாக தடிபோல இருக்கும், வழ வழப்புடையது, படம் எடுக்கும், கடிக் கும், விஷமுடையது என்றவுடன்பாம்பு என்று கூறிவிடுகிறோம்.

இரு கால்கள், இரு கைகள், முகம், கண்கள், மூக்கு, செவி, பேச்சு, சிரிப்பு, சிந்தனை இது என்ன என்றவுடன் மனித வடிவம் நினைக்கப்படுகின்றது.

ஆனால், அடுத்த வீட்டு அல்லி என்ற வுடன் ஒல்லியாக இருப்பவள் என்று கூறுகிறோம்.

பக்கத்து வீட்டு பார்வதி என்ற வுடன் பருமனாக, குட்டையாக, கருப் பாக இருப்பவள் என்கிறோம்,

கோடிவீட்டு கோபுஎன்றவுடன், கிளி மூக்குக்காரன் என்றவடிவம் வருகிறது.

மேலே கூறியது எதைப் புலப்படுத்து கின்றது என்றால் மனிதன் என்றவுடன் ஒரு பொதுத் தோற்றம் நமது அறிவுக் குப் படுகின்றது. மரம், பாம்பு, காக்கை என்ற பொது வடிவம் புலப்படு கின்றது.

அல்லி, பார்வதி, கோபு என்று குறிப்பிட்டுக் காட்டியதில் அவர்கள் நடப்பார்கள், பார்ப்பார்கள், பேசுவார் கள் என்று மட்டும் கூறி நிறுத்திக் கொள்ளவில்லை. ஆனால் மனிதர் என்ற ஒட்டு மொத்தமான ஒருவடிவம் நமக்கு விளங்குகின்றது.

இந்த வடிவத்தையே திருமூலர் உடம்பு என்ற பொதுச்சொல்லால் கூறு கின்றார்.

ஒவ்வொரு வடிவமும் தனியானது.

மனிதன், மனிதனைப் படைக்கிறான்.

புழு புழுவைப் படைக்கின்றது.

ஒவ்வொரு வடிவத்துள்ளும் உள்ள ரசாயனப் பொருட்கள் அவ்விதமா னவை என்று அரிஸ்டாடில் கூறுகின் றான்.

வடிவம், அதனுள் ரசாயன மூலப் பொருள் என்றால் போதுமா? வேறு, வடிவத்துள் என்ன இருக்கின்றது ?

அதுதான் உயிர் ! அது உடலுக்குள் தனியாக இல்லை ! காரணம், அது ஒரு தனிப்பொருள் அல்ல. வடிவம் என்ற அமைப்புக்குள் நடக்கும் வேலைகளைப் புரிய வைக்க இருக்கின்ற ஒரு எண் ணம் என்கிறார் அரிஸ்டாடில் !

வேலையை எப்படி பார்ப்பது? அது செய்யப்படும்போது !

காற்றை எப்போது அறிவது ?

வீசும்போது! அதனால் மரம் ஆடும் போது !

அதைப்போலவே உயிரையும் காண முடியும்.

மனித உடலில் இருதயம் துடிக்கின் றது. வயிறு பசிக்கின்றது. கால் நடக்கின்றது. "செய்" செய்கின்றது. கண் பார்க்கின்றது. செவி கேட்கின் றது.

இந்த ஒவ்வொரு புலனும் எது தேவைப்படுகின்றதோ அதைப் பெற முயல்கின்றது,

சோறு வேண்டும் என்று வயிறு சொன்னால் வாய் உணவைப் பெற முயல்கின்றது.

காற்று வேண்டும் என்று சுவாசப்பை கோரும்போது மூக்கு கொண்டு வருகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு உறுப்பும் புலன்கள்மூலம் தமது தேவையை முழுமை செய்துகொண்டு அவ்வடிவத்திற்குள்ளேயே வளருகின்றன; மாறுகின்றன.

ஆம், இவ்வேலையும், அதனுல் ஏற்படும் அசைவுக்கும் மாற்றத்துக்கும் பொதுப் பெயர் உயிர்.

உய்ந்திருப்பது உயிர் என்கிருர் மூலர்.

"உய்வது" என்ருல் வாழ்வது, ஜீவிப்பது என்று பொருள்.

"உய்தல்" நீங்கினுல், வாழ்விழந்தது, அழிந்தது, ஜீவனற்றது என்று பொருள்.

இதையே 'உசிரு' என்பர். உசந்தது உயர்ந்தது என்று கருதினர்.

"உ" கரமாக இருப்பது 'உயிரு' என்றனர்.

"அ" என்ருல் சத்து;

"உ" என்ருல் சித்து;

"ம" என்ருல் ஆனந்தம்.

"உ" கரமாக இருப்பது என்ருல் சித்தாயிருப்பது என்று கூறுவர். இதையொட்டியே சித்தம்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள ஒவ்வொரு பொருளும் சில குறிப்பிட்ட வேலையையே செய்கின்றன; இயங்கி வருகின்றன. ஒவ்வொன்றுக்கும் வேறுபாடுள்ளது. இதைப் புரிந்துகொள்வதே அறிவு!

ஒவ்வொரு புலனும், வெளியேயுள்ள பொருளை உணர்கின்றது, சுவைக்கின்றது, பார்க்கின்றது, கேட்கின்றது.

இப்புலன்களுக்கு எல்லாம் சாரமாக உள்ள பொருளே மனம். இது அறியும்; ஆவலைத் தூண்டும்; அதன் பிறகே இயக்கம்.

எனவே, வடிவம், உடம்பு வேறல்ல; அதனுள்ளிருப்பதே உயிர்; மனம்; ஒரு வடிவத்தின் வேறுவேறு அம்சங்களே அவை.

புலி இருந்தால்தான் புலி உயிர் இருக்கும்;

மனிதன் உடல் இருந்தால்தான் மனித உயிர் இருக்கும்;

மனித உயிர் இருந்தால்தான் மனித மனம் இருக்கும்;

உடம்பு, உயிர், மனம் வேறல்ல. ஆனுல் ஒன்றுக்குள் உள்ளடங்கிய அம்ச வேறுபாடுகளே" என்று அரிஸ்டாடில் கூறுகின்ருர்.

இதையே நமது மூலர், உடம்பு, உயிர், ஞானம் என்று பகுக்கின்ருர்.

"உடம்பு அழிந்தால் உயிர் அழியும்.
திடம்படமெய்ஞானம் சேரவுமாட்டார்'
– மூலர்

அரிஸ்டாடிலின் அறிவு, தர்க்கரீதியான பார்வை, உடம்பு அழிந்தால் உயிர் அழியும் என்ற அளவோடு நின்றுவிடுகின்றது.

நந்தி மாணவன் மூலனின் அறிவோ மேற்கொண்டும் ஆராய்கின்றது.

உடம்பழிந்தால்உயிரழியுமென்கின், உடம்பை வளர்ப்பதால் உயிர் வளரும் என்ற தர்க்கத்தின் மூலம் வி[...] காண முயன்ருர்.

உடம்பு எவ்வாறு தோன்றுகின்ற[...] எவ்வாறு தேய்கின்றது? ஈடு செய்[...] பொருட்கள் எவை? இவற்றை[...] கண்டு தனது கற்ப முறையை நவி[...]ருர். இதையே "உபாயம்" என்[...] சொல்லால் குறிப்பிடுகின்ருர்,

திருமூலன் 'வைத்தியக் கருக்கி[...]யில் உபாயம் வரிசையாகக் கூறியு[...]ளார்.

அரிஸ்டாடிலின் அறிவு மாய[...] புரிந்தது!

திருமூலனின் அறிவு உபாய[...] தெரிந்தது!

"உடம்பாரழியின் உயிராரழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவுமாட்டா[...]
உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தே[...]
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்[...]
தேனே. (மூல[...]

பாரதி

ஜகன்"

1. பாரதி யென்ருெரு பாவலன் — நாட்டுப்
பற்றையு ணர்த்திய நாவலன்
சாரதி யாம்கண்ணன் ஏவலன் — மூல
சத்திய ருள்பெற்ற காவலன்!

2. பாட்டுக்கோ ரீடிணை யின்றியே — பல
பாடிக் கொடுத்தவன்! நன்றியே!
கேட்டவர் கள்மனம் ஒன்றியே — நாட்டுக்
கிளர்ச்சியில் பெற்றனம் வென்றியே!

3. காதலைப் பற்றியும் பேசினுன் — தீய
காதக ரைத் திட்டி ஏசினுன்!
சீதக்க வித்தென்றல் வீசினுன் — அதில்
தெய்வ மூலாம் நன்கு பூசினுன்!

4. காந்தியை நெஞ்சுற வாழ்த்தினுன் — அவன்
காட்டிய நல்வழி போற்றினுன்!
மாந்தரின் அச்சத்தை வீழ்த்தினுன் — தமிழ்
மாதினுக் கேமுடி தாழ்த்தினுன்!

5. செந்தமிழ் நாடெனப் போற்றினுன் — இதை
தேசமெலாம் பறை சாற்றினுன்!
சிந்தையில் பக்தியை ஊற்றினுன்! — அங்கே
தேசுறு நற்பணி யாற்றினுன்!

6. வேதப்பொ ருள்களைக் காட்டினுன்! - உயர்
வேதாந்த நன்னெறி நாட்டினுன்!
ஆதிமு தல்வனைப் பாட்டினுல் — பாடி
ஆனந்த மெய்நிலை நாட்டினுன்!

7. வாழிய பாரதி நாமமே — அவன்
வண்டமிழ் போற்றுதல் சேமமே!
வாழ வழி சொன்ன போதமே — இங்கு
வந்து நிறையின்ப நாதமே!

கைத்தறி நெசவுத் தொழில்

M. மாரிமுத்து. பி. ஏ., பி. காம்., எச். டி. சி.

★

ஸ்ரீ நித்தியானந்த கனுங்கோவின் தலைமையிலான ஜவுளித் தொழில் விசாரணைக் கமிட்டியும், ரக ஒதுக்கல் பற்றி தன் கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

"தொழில் நுணுக்க காரணங்களுக்காக கைத்தறிக்கு ரக வாரிச் சலுகை காட்டுவது அவ்வளவு பொருந்தாது." —"கைத்தறி, சிறிய அளவில் நடக்கும் விசைத்தறி, பெரிய அளவில் நடக்கும் விசைத்தறி, ஆலை உற்பத்தி முறைகள் நிலைக்க வேண்டிய அளவுக்கு துணித் தொழில் முன்னேறும் வரையில் ரக வாரிச் சலுகை நீடிக்க வேண்டுமென கமிட்டியினர் கருதுகிறார்கள்."

இந்தக் கமிட்டியும் கைத்தறிக்கு நன்மையளிக்கக் கூடிய கண்ணோட்டத்தில் தனது சிபார்சுகளைச் செய்யவில்லையென்பது கைத்தறியாளர்கள் கருத்து.

"கைத்தறியாளருக்கு வருஷத்திற்கு 300 நாட்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நிச்சயம் ஏற்படும் வரையிலும், கைத்தறி, சிறிய அளவு விசைத்தறி, பெரிய அளவு விசைத்தறி, ஆலைகள் எல்லாவற்றின் உற்பத்தி முறைகள் நிலைக்கும் வரையில் ரகவாரிச் சலுகை நீடிக்க வேண்டும் என கமிட்டியினர் கருதுகின்றனர்", என்று பொதுப்படையான கருத்தை மட்டுமே இந்த கனுங்கோ கமிட்டியினரும் தெரிவித்திருக்கின்றனர்,

1963ம் ஆண்டு ஸ்ரீ அசோக்மேத்தாவின் தலைமையில் அமைக்கப்பட்ட விசைத்தறி விசாரணைக் கமிட்டி தனது சிபார்சுகளை அண்மையில் சமர்ப்பித்திருப்பதாக பத்திரிகை செய்தியிலிருந்து தெரிய வருகிறது. ஸ்ரீ அசோக் மேத்தா கமிட்டியினர் சாயச்சேலை உற்பத்தி முழுவதையும் பிரத்யேகமாக கைத்தறிக்கே ஒதுக்கிவிட வேண்டுமென்றும், மில்களின் வேஷ்டி சேலை உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

நான்காம் பருவம்.

ஜவுளித் தொழில் விசாரணைக் கமிட்டிகள்

பொதுவாக ஜவுளித்தொழில் பற்றியும், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி, தோன்றிய பிரச்சினைகளின் காரணமாக அதைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது அரசாங்கத்தால் அந்த பிரச்சனைகளை விசாரிப்பதற்கு பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன.

கைத்தறி நெசவுத் தொழில் பற்றி விசாரணை செய்வதற்காக 1941-ல் டாக்டர் பி. ஜே. தாமஸ் தலைமையில் ஒரு கமிட்டி. நியமிக்கப்பட்டது. 'விவரங்கள் அறியும் கமிட்டி' (Fact finding Committee) என அழைக்கப்பட்ட அந்தக்குழுவினர் தங்கள் அறிக்கையை 1943-ல்சமர்ப்பித்தனர். பருத்தி நூல் ஆலைத் தொழில் பற்றி விசாரிக்க யுத்தத்திற்குப் பின் 'திட்டமிடும் கமிட்டி' என்று ஸ்ரீ தரம்ஸே எம். கடாவ் தலைமையில் நியமிக்கப்பட்டது. 1950-ல் ஸர். ஏ. ராமஸ்வாமிமுதலியார் தலைமையில் பருத்தி ஆலைத்தொழில் பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி தங்கள் சிபார்சுகளை 1952-ல் சமர்ப்பித்தது.

ஸ்ரீ கனுங்கோ கமிட்டி

ஜவுளித் தொழிலை விசாரணை செய்து தனது கருத்து தெரிவிக்குமாறு ஸ்ரீ நித்யானந்த கனுங்கோ தலைமையில் 25-11-1952-ல் அரசாங்கத்தினரால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டி 1954-ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. கைத்தறியாளர்களைப் பொருத்தவரையில் ஆட்சேபணைக்கிடமான, சர்ச்சைக்கிடமான பல சிபார்சுகளைச் செய்த முதல் விசாரணைக் கமிட்டி இந்த கனுங்கோ கமிட்டியாகும்.

முடிவுகள், சிபார்சுகள் சில

(1) மேலோட்டமான பரிசீலனை செய்துபார்த்ததில் நெசவாளர் எண்ணிக்கை பற்றி 1951 ஜனத்தொகைக் கணக்கே உண்மை நிலையைப் பிரதிபலிக்கிறது என்று எண்ண இடமிருக்கிறது. (பாரா 40)

(2) மேலோட்டமான பரிசீலனையிலிருந்து 1953-ல் இந்தியாவில் 2.06–0'13 மிலியன் கைத்தறிகள் இருந்ததாகத் தெரிகிறது. (பாரா 40)

(3) சிறப்பான நெசவுக்குப் பேர்போன தென்பிராந்தியத்திலுள்ள மாரமங்கலம், ஆதனூர்பட்டி போன்ற சிறப்பான இடங்களை எடுத்துக்கொண்டால் ஒரு கைத்தறியில் சராசரி 1·25 ஆள்களுக்கு முழுநேர வேலை கிடைக்கிறது என்று தெரிகிறது. இந்தக் கணக்குப்படி பார்த்தால், 1·2 மிலியன் கைத்தறிகளில் வருஷத்துக்கு 200 நாட்கள் தினசரி பூராநேரமும் வேலை செய்தால் 15லட்சம் பேர்களுக்கு இந்தத் தொழிலில் வேலை கிடைக்கும். (பாரா 50)

(4) 1960க்குள் தலா 18கஜம் துணி வாங்கும் நிலை ஏற்படும் என எதிர்பார்ப்பது தவருகாது என்று கமிட்டியினர் கருதுகின்றனர். (பாரா 50)

(5) 40 கோடிமக்கள் தலா 18 கெஜம் துணிவாங்கினால், எதிர்பாராமல் மழையின்மை, பஞ்சம் ஏற்பட்டாலொழிய 1960க்குள் 7200மில்லியன் கஜம் தேவை ஏற்படலாம். (பாரா 50)

(6) மேற்கூறப்பட்ட பரிசீலனையின் எல்லா அம்சங்களையும் பார்த்தால் வருஷத்திற்கு 1000 மில்லியன் கஜம் துணி மட்டும் ஏற்றுமதி செய்ய திட்டமிட்டு நிறைவேற்றுவது நல்லது. இதற்குமேல் ஏற்றுமதி விரிவடையலாம் என எதிர்பார்ப்பது நல்லதல்ல. (பாரா 60)

(7) மிக கவனமாக ஆராய்ச்சி செய்த பிறகு கமிட்டியினர் பின்வரும் தவிர்க்க முடியாத முடிவுக்கு வந்திருக்கின்றனர். கைத்தறிகள் இருக்குமிடங்களில் மின்சார வசதி ஏற்பட கைத்தறிகளை ஓரளவு தானே இயங்கும் தறியாகவோ விசைத்தறியாகவோ மாற்றி நெசவு சாதனத்தைச் சிறப்பானதாகச் செய்யவேண்டும். ஆனால் இந்த மாறுதல் சமூக, பொருளாதார சீர்குலைவு ஏற்படாத வகையில் நிதானமாகச் செய்யவேண்டும். (பாரா 81)

(8) 1954-ல் உள்நாட்டுத் தேவைக்கு 5600 மில்லியன் கெஜம் துணி வேண்டியிருக்கும்.

(9) இந்தப் புதிய தறிகள் 2·5 லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 3 லட்சம் கைத்தறிகளுக்குப் பதில் 2·13 லட்சம் சீர்திருந்திய தறிகள் அமைப்பதால் 6 வருஷ காலத்தில் 1·25 லட்சம் நெசவாளிகள் வேலை இழப்பார்கள். வருஷத்திற்கு 20,000 பேர் வீதம் வேலை இழப்பது பிரமாதமான சமூகப் பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்திவிடாது. ஏனெனில் முதல் ஐந்தாண்டு திட்டமும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும். விவசாயம் தொழில் மற்ற துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்குமாகையால் ஜனத்தொகை அதிகரிப்பு விகிதாசாரத்தைவிட அதிகமாக புது வேலைகளில் ஈடுபட சந்தர்ப்பமளிக்கலாம். (பாரா 89)

(தொடரும்)

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

"மாயோன்"

★

தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரைச் சிலர் பல்கலைக் கழகம் என்று கூறுப. எனக்கு அவர் அவ்வாறு தோன்று கிறாரில்லை. அவர் பல்கலைக்கழகத்தை யுங் கடந்த ஒருவர் என்பது என் உட்கிடக்கை. மீனாட்சிசுந்தரனார் காட்சி, எனக்குக் குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் சேர்ந்த ஒரு கழகமாகத் தோன்றுகிறது.—திரு.வி.க.

தொல்காப்பியம் முதல் தற்காலத்து மொழியியல் நூல்வரை கசடறக் கற்றவர். பட்டம் பெற்ற சட்டப்புலவர். இவர் விரும்பிக் கற்ற மொழிகள்: கன்னடம், தெலுங்கு, மலையாளம், வடமொழி, பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன்.

தமிழ் நாட்டில் தளராமல் சமயத் தொண்டாற்றி வந்த வித்துவான் கோ. வடிவேலு செட்டியாரிடம் மீனாட்சி சுந்தரனார் தமிழ்க் கல்வியும், சமயக் கல்வியும் முறையாகப் பயின்றார். திருவாளர் அண்ணங்கராசாரியார், திருப்புறம்பயம் இராமசாமி நாயுடு, சீரங்கம் சடகோபாசாரியார்- இவர்களி டன் வைணவ சமயக் கருத்துக்களைக் கேட்டுத் தெளிந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் இவற்றில் ஊறித் திளைத்தவர் தெ. பொ. மீ. பொருளாதாரம், வரலாறு, தத்துவம், உளநூல், சமயம், தருக்கம், அறிவியல், மொழிநூல் - இவைகளில் தெளிந்த அறிவு இவருக்கு உண்டு.

பன்மொழிப் புலவர் சிறந்த பேச்சாளர். பல்துறைக் கருத்துக்களை அள்ளி வீசி கேட்போரைத் தம்பால் ஈர்க்கும் சொல்வன்மை பெற்றவர். சொல் வேந்தருடைய சொல் மாரி பொழியாத மேடையே இல்லையென்று சொல்லலாம்.

நாவலர் மீனாட்சி சுந்தரனார் சிறந்த எழுத்தாளர். நூல் எழுதத்தூண்டினால் 'எழுதுவதற்கென்ன இருக்கிறது? என்னுடைய கருத்துக்களை மாணவர்களுக்குத் தந்துவிட்டால் அவர்கள் உலகிற்குத் தந்து விடுகிறார்கள். கருத்துக்களைப் பிறர் அறியவேண்டும். இது தான் நூலெழுதும் நோக்கம்' என்று பதில் கூறுவதுண்டு. பிறருடைய வற்புறுத்தலின் பேரில் இவர் எழுதிய நூல்களும் உண்டு. இவருடைய கருத்து மிக்கக் கட்டுரைகள் 'கலா நிலையம்' இதழ்களிலும், மற்றும் பல்வேறு மலர்களிலும் மலிந்து கிடக்கின்றன.

'என் வாழ்க்கையை உருப்படுத்திய, உருப்படுத்தி வருகிற நூல் திருக்குறளே ஆம். என் ஆராய்ச்சி என்று சொல்வதனைவிட என் உள்ளத் துடிப்பின் விளக்கம் என்றுகூட இதனைக் கூறி விடலாம். ... என் உயிரின் பிரப்பு இந்நூல். ஏதோ ஒருவகையாக எனக்கு விளங்க வேண்டிப் புதுப்பொருள் காணும் கட்டாயம் ஏற்படுகிறது. அவரவர் காலத்திற்கேற்ப அவ்வந்நிலை விளக்கிவருதல் வேண்டும். இந்நாளைக் கேற்ப இந்நூல் ஒருவாறு திருவள்ளுவரை விளக்கிச் செல்கிறது' என்று தெ.பொ.மீ. "வள்ளுவரும், மகளிரும்" என்ற நூலில் கூறுகிறார். மகளிருக்கு ஏற்றம் தரும் இவருடைய ஆராய்ச்சி போற்றுதலுக்கு உரியது.

தெ. பொ. மீ. அவர்களின் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பற்றிய ஆழ்ந்த புலமையைப் புலப்படுத்தும் நூல் 'சமணத்தமிழ் இலக்கிய வரலாறு.' சமணர்கள் சங்க காலத்தி லிருந்தே தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங்களையும் எழுதித் தமிழை வளர்த்துள்ளார்கள். அவர்களுடைய படைப்புகளை முறைப்பட விளக்குகிறது இந்நூல். சமணர்கள் தமிழை வாழச்செய்து, தமிழ் ஆழத்தைத் தம்மைப்போல் பிறரும் அறியப் பெரிதும்...உதவ முயன்றனர். அம் முயற்சியில் வெற்றி கண்டனர். சமணத் தமிழ் ஆராய்ச்சியில் வெற்றி கண்ட பேராசிரியர் 'இவ்வரலாறு என்னுடைய ஊனக் கண்கொண்டு கண்ட வரலாறு. ஆதலின் இதனையே முடிந்த முடிபெனக் கனவிலும் யான் காணவில்லை' என்று அடக்கமாகக் கூறுவதை பாராட்டாமலிருக்க முடியாது.

தமிழ்ச் சமுதாயம், கல்வி, வரலாறு, சமயம், அரசுநிலை - இவற்றைப்பற்றி பேராசிரியர் நினைத்ததை 'தமிழா நினைத்துப்பார்' நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. பழம் பெருமையை நினைப்பூட்டி, தற்கால நிலையைச் சுட்டிக்காட்டி, எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டும் இந்நூல் ஆர்வத்தைத் தூண்டி அறிவூட்டுகிறது.

சிறந்த ஆராய்ச்சியாளரான தெ.பொ.மீ. அவர்கள் சிறந்த திறனாய்வாளர். புதுமுறையைப்புகுத்தி தமிழ்த் திறனாய்வுக்குப் புத்துயிரளித்தவர். பெரியபுராணத்தில் வரும் எறிபத்த நாயனார் வரலாற்றை இலக்கியக் கண் கொண்டு ஆராய்ந்து, ஒவ்வொரு சொல்லையும் சுவைத்து, பாட்டின் முழுப்பொருளைக் கண்டு இன்புற்று பேராசிரியர் தாம் பெற்ற இன்பத்தை வையகத்திற்கு வாரி வழங்குகிறார் 'அன்புமுடி' என்ற திறனாய்வு நூலில்.

'கலா நிலையம்' என்ற கிழமைத் தாளில் தெ பொ.மீ. எழுதிய கட்டுரைகளில் குலசேகரரைப் பற்றியன 'குலசேகரர்' என்ற நூல் வடிவில் வெளிவந்துள்ளது. குலசேகரர் பாடிய பத்துத் திருமொழிகளில் முதல் ஐந்தின் கண் அடங்கியுள்ள தெய்வீகத் தத்துவங்களையும், நயங்களையும் இந்நூல் அழகாக விளக்கி ஆனந்தத் தேன் பாய்ச்சுகிறது.

பன்மொழிப் புலவரின் பல்துறைக் கருத்துக்களை உள்ளடக்கிய உரைநடை புதுவழியொன்றை வகுத்துள்ளது. புத்தம் புதிய உண்மைகள் வாழ்வோடு ஒட்டி உறவாடும் முறைகள் விளக்கப் படுகின்றன.

பலமொழிகளை அவற்றின் இலக்கணங்களோடுகற்ற இவர் மொழியியல் துறையில் வல்லுநராய் விளங்குகிறார். பலர் மொழியியல் துறையில் முன்னேறி ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற வழிகாட்டி வருகிறார்.

பேராசிரியர் இலக்கிய மாநாடுகள் பல நடத்தித் தமிழ் மக்களிடையே தமிழுணர்வைப் பெருக்கியுள்ளார். கல்விப் பணியோடு பொதுப்பணிகள் பலவற்றில் ஈடுபட்டுத் தன்னலமற்ற பணி புரிந்துள்ளார். தமிழ்க் கலைக் களஞ்சியம் சிறந்த முறையில் வெளிவர பேருதவி புரிந்துள்ளார். கல்லூரிகளில் எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையில் உறுதியுடன் நின்று அரும்பாடுபட்டு வருகிறார். 'பிறமொழிகளில் உள்ள கலைகள் தமிழிலே வர வேண்டும். அப்போதுதான் தமிழ்மொழி இன்றைய தேவையை நிறைவு செய்யும் தகுதிபெறும்' - இது பன்மொழிப் புலவரின் கனவு, கனவை நனவாக்க வேண்டியது தமிழருடைய கடமை.

வாழ்க தெ.பொ.மீ.!

வளர்க தமிழ்ப்பணி!!

"எழுத்தாளன்"

[மாத வெளியீடு]

வருட சந்தா ரூ. 3.
தனிப் பிரதி 25 காசுகள்

விவரங்களுக்கு:—
நிர்வாகி, "எழுத்தாளன்"
24, தேரடிக் கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி.

உரை கடந்த ஒன்று

கவியோகி சுத்தானந்த பாரதியார்

கரையுடைத் தின்பக்
 கடலெனத் தாவும்
உரைகடந் தோங்கும்
 ஒன்றது நீயே!

வீறுபெற் றென்னுள்
 வெடித் தெழுங்கனலே
ஆறுபோல் ஓடும்
 அருளா வேசமே!

அழகில் எழுந்த
 அமுதச் சுடரே
பழகிய வாழ்வின்
 பண்ணே விண்ணே!

காதலில் எழுந்த
 கற்பகத் திருவே
சாதலை வென்ற
 சாத்திய விரிவே!

வானச் சுடர்மணி
 வன்னத் தோகையில்
ஞானநடஞ் செயும்
 நல்லிசைத் தேனே!

வறுமையை வெல்லும்
 மனமகிழ் செல்வமே
பொறுமையிற் பூத்த
 புன்னகைச் சொக்கே!

நான் என முனைந்து
 நானிலம் அளாவித்
தான் எனத் தழைத்த
 தனிப் பெரும் பொருளே!

கலையென்பேனா
 கவிதையென்பேனா
அலைகடந்துள்ளே
 அமைதி யென்பேனா!

கருதரும் அன்புக்
 கடவுளென்பேனா
ஒரு தனி விரிவே
 உரையுனக்குண்டோ!

ஒருபோழுதும் ஒத்துப்பார்க்காதீர்கள்...

உங்கள் குழந்தைகளை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் ஒத்துப் பார்த்தால் ஏமாற்றந்தான் ஏற்படும். அதே மாதிரி மெட்ரிக் முறையையும், பழைய சேர், வீசை முறையையும் ஒத்துப் பார்ப்பது வீண் வேலைதான். இதனால் உங்கள் நேரத்தை வீணடிப்பதுடன், நஷ்டமும் அடைவீர்கள்.

துரிதமான சேவைக்கும், நேர்மையான வர்த்தகத்திற்கும் பொருள்களை

மெட்ரிக் யூனிட்டுகளில் வாங்குங்கள்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

புரிவதற்காகப் பசுமைக் கனவுகள் காண்கிறான்.

அவை எல்லாம் அப்படி அப்படியே நிறைவேறவேண்டாம்; முக்கால்வாசி, அரைவாசி பூர்த்தியானால்கூட அவன் மிக மகிழ்ந்து போவான்.

ஆனால், கால்வாசி, அரைக்கால் வாசிகூட நிறைவேறாதபடி சதிசெய்து விடுகிறது காலம்.

'சந்தர்ப்ப சகாயம்' (காலத்துணை) என்று ஒன்று இருப்பது போலவே, 'சந்தர்ப்பச் சதி' (காலத்தின் துரோகம்) என ஒன்றும் உண்டு.

இந்தச் சதி காரணமாக ஒவ்வொருவருக்கும் வீண் உழைப்பு, வீண் அலைச்சல், வெட்டி வேலைகள், வீணான நஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தவிர்க்கவும் இயல்வதில்லை.

அப்போதெல்லாம், இவ்வாறு முனகுவது தவிர வேறு வழியுமில்லை—

'ஓ காலதேவா! உனக்கு வணக்கம்.
நன்றே செய்வாய், தீங்கு பயப்பாய்.
நான் என் செய்வேன் இதற்
 [கெல்லாம்!]

எழுத்தாளன்

சிறப்பு மலர்

விலை. ரூ. 3

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor : T. L. Panchapakesan.